ஸ்ரீ ஹரி :

பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை



| வேணு : 7 | ஏப்ரல் 2002 | கானம் : 9 |
| --- | --- | --- |

ஸ்ரீ ஹரி:

# பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

(தெய்வீக மாதப் பத்திரிகை)

வேணு : 7 ஏப்ரல் 2002 கானம் : 9

## விஷய ஸூசிகை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | குர்வஷ்டகம் | 2 |
| 2. | மதுரமான மஹனீயர் - 77 | 3 |
| 3. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள் | 8 |
| 4. | வேத கதைகள் - 58 | 11 |
| 5. | எந்தரோ மஹானுபாவுலு - 48 | 13 |
| 6. | ஸனாதனப் புதிர் - பகுதி - 12 | 17 |
| 7. | உவமைக்கோர் கம்பநாட்டாழ்வான் - 5 | 19 |
| 8. | பாலகர்களுக்கு ஒரு கதை - 52 | 21 |
| 10. | ப்ருந்தாவனமும், நந்தகுமாரனும் - 7 (தொடர்ச்சி) | 24 |
| 11. | மறக்க முடியாத நாள் (தெடர்ச்சி) | 27 |
| 12. | ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 79 | 30 |


Visit us at www.madhuramurali.org

ஸ்ரீ ஹரி:

# குர்வஷ்டகம் (குரு அஷ்டகம்)

1. ***ஸ்ரீ*** *பார்வதீபுத்ரமவிக்னநாஶம் வித்யாகுரூன் ஞானயதீந்த்ரமுக்யான் ।*
*ராஜ்யஶ்ரியம் மாதரமிஷ்டதாத்ரீம் ப்ரணம்ய குர்வீம் ஸ்துதிமாதனோமி ॥*

2. ***மு****ராரிமாராதுபதர்ஶயந்தம் ஹஸந்முகம் கோமள வஜ்ரதேஹம் ।*
*ஜபே ஸுரக்தம் விஷயே விரக்தம் ஹ்ருதப்ஜ கோஶே த்ருததைவமூர்த்திம் ॥*

3. ***ர****மாபதிம் மானஸமந்திரே கே ஸந்தாரயந்தம் ஜனதார்த்திநாஶம் ।*
*ஸ்வவீக்ஷணேனாகில லோகயாத்ராம் ப்ரவர்த்தயந்தம் குருராஜமீடே ॥*

4. ***லீ****லாந்ருதேஹம் ஸுக்ருஹீதரூபம் நாமானி நித்யம் ப்ரவதந்தமுச்சை: ।*
*ராதே ரமாஜீவன ராமபத்ர ப்ரேமைகமூர்த்தே மம ஜீவபந்தோ ॥*

5. ***த****ர்மார்த்தகாமான் விதரந்தமார்யம் பக்த்யா விஹீனேஷு க்ருபார்த்ர த்ருஷ்ட்யா ।*
*திவ்யானி நாமானி ஸுபோதயந்தம் பஜே முதா நாமஸமாதிநிஷ்டம் ॥*

6. ***ர****ாதாபதாப்ஜே ஸுநிவிஷ்டசித்தம் ரமாபதே: பாதயுகேऽதிபக்தம் ।*
*மஹானுபாவம் மஹிதாத்மலோகம் வந்தே பராத்மானமகாதபோதம் ॥*

7. ***கு****ரும் மஹாபாகவதம் தயாளும் தேஶேஷு திவ்யேஷு ஸுரூடபாவம் ।*
*வேதேஷு ஶாஸ்த்ரேஷு ஸுபத்தத்ருஷ்டிம் பஜாமி ராதாமனுஜாபிநம் தம் ॥*

8. ***ரூ****பம் த்வதீயம் மம சித்தகேஹே வித்யோததாம் பக்திரஸார்த்த ஸித்யை ।*
*நாமாபி தே மே லஸதாம் முகாக்ரே ஸம்வர்ததாம் ப்ரேம ஸுகானுபூதி: ॥*

9. ***ஜீ****வோऽஸ்மதீயோ பவதாபதப்தோ பவத்கடாக்ஷாம்ருதஸம்பிபாஸு: ।*
*அதோ தயார்த்ரேண ஹ்ருதானுகம்ப்யோ ஸம்ப்ரீயதாம் போ! குரு ஸார்வபௌம! ॥*

10. *குர்வஷ்டகம் கஷ்டமனாதிமயாம் தாபத்ரயம் வைஷயிகேஷு லிப்ஸாம் ।*
*மோஹாந்தகாரம் ப்ரவிலாப்ய க்ருஷ்ணே பக்திம் தனோத்யாத்மஸுகானு போகத்ரீம் ॥*

**– ப்ரஹ்மஸ்ரீ மல்லிகார்ஜுன ஸோமயாஜி**

## 77

இப்பொழுதெல்லாம் நம் ஸ்வாமிகளைப் பார்ப்பதற்காக வருபவர்களில் பலர், அவரவர்களின் ஊரிலுள்ள ஆலயங்களின் புனருத்தாரண விஷயமாக ஆலோசனைகளை கேட்க வருகின்றனர். அவர்களிடமெல்லாம் பேசிக்கொண்டிருக்கும்பொழுது, திருப்பணி விஷயமான ஸ்வாமிகளின் அபிப்ராயங்கள் ஓரளவு நமக்கும் தெரிய வருகின்றது.


பொதுவாகவே, தமிழ்நாட்டில் ஶிவ, விஷ்ணு ஆலயங்கள் பல மோசமான நிலையில் இருக்கும் சூழ்நிலையில், புதிய ஆலயங்கள் கட்டுவதை முடிந்த அளவு தவிர்க்க வேண்டுமென்பதே ஸ்ரீ ஸ்வாமிகளின் அபிப்ராயம். அப்படி தாங்கள் குடியேறிய காலனிகளிலோ, ப்ரதேசங்களிலோ கோவிலே இல்லையென்றால் மிகவும் சிறிய அளவில் புதிதாக ஒரு கோவிலை நிர்மாணிப்பதே போதுமானது என்பதும் ஸ்ரீ ஸ்வாமிகளின் கருத்து. மேலும், பழைய கோவில்களை புனருத்தாரணம் செய்யும் காலங்களில், புதியதாக ஸ்வாமி ஸன்னதிகளை ஏற்படுத்த வேண்டாம் என்பதும் அதுபோல், திருப்பணி செய்யும் பழைய கோவில்களில் புதியதாக மண்டபங்களோ, ப்ராகாரங்களோ, கட்டடங்களோ கட்டவேண்டாம் என்பதும் ஸ்ரீ ஸ்வாமிகளின் முக்கியமான அபிப்ராயம்.

ஏனென்றால், நமது முன்னோர்களும், அரசர்களும் அன்று அவர்களுக்கு அமைந்த சூழ்நிலையில் இத்தகைய பெரிய கோவில்களை கட்டினர். அவற்றை இன்று நாம் உள்ள நிலையில், திருப்பணி செய்வதே மிகவும் கடினமாக உள்ளது. இந்நிலையில் நாம் மேலும் சன்னதிகளையும், ப்ராகாரங்களையும், மண்டபங்களையும் புதிதாக கட்டினால், வரும் ஸந்ததியினர் அவைகளையும் சேர்த்து திருப்பணி செய்ய மிகவும் சிரமப்படுவார்கள் என்பதுதான் அதற்கான காரணம்.

பல ஊர்களிலும் உள்ள அந்தந்த ஊர்களைச் சேர்ந்தவர்கள் 10-20 பேர்களாக சேர்ந்துகொண்டு ஒரு திருப்பணிக்குழு அமைத்துக்கொண்டு, அந்தந்த ஊர்களிலுள்ள ஆலயங்களைத்

திருப்பணி செய்ய பலவாறு முயற்சிப்பதைப் பார்ப்பதற்கு மிகவும் ஸந்தோஷமாகதான் உள்ளது. அதே ஸமயம், அந்த கோவில்களில் உள்ள கோபுரங்களிலும், மதில் சுவர்களிலும் சிறு விதைகள் விழுந்து, பின்னர் அவையே பெரிய மரங்களாகி அந்த கோபுரங்களையும், மதில் சுவர்களையுமே சாய்த்து விடுகின்றன. சில கோவில்களில் புதர்களும், பாம்புப் புற்றுகளும் மண்டி, உள்ளே செல்வதற்கே அச்சம் தரும் நிலையும் உள்ளது. இவ்வளவு மோசமான சூழ்நிலை வரும்வரை அந்த ஊரிலுள்ள பிரமுகர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள்? இது அவர்களது அக்கறையின்மையையே சுட்டிக்காட்டுகிறது.

பலர், பணத்தினால் ஆட்களை நியமித்து, ஆலயங்களைப் பழுதுபார்த்து, திருப்பணி செய்வதையே தொண்டு என்று நினைப்பதுதான் இதற்கு காரணம். அப்படியில்லாமல், கோவில்களை பெருக்குவது, உழவார பணி செய்வது, ஒட்டடை அடிப்பது, நந்தவனம் அமைத்துக்கொடுப்பது, பூகட்டுவது, கோவிலை தூய்மையாக பராமரிப்பது, பூஜா பாத்திரங்களை தேய்ப்பது, ஸ்வாமி வஸ்திரங்களை அலசிக்கொடுப்பது, கோவில் மதில்சுவர் மற்றும் கோபுரங்களில் வளரும் செடிகளை அவ்வப்போது எடுப்பது போன்றவையே உண்மையான அந்தரங்கமான தொண்டாகும். இவற்றினால் சித்த ஶுத்தி ஏற்படும்.



கோவில்களுக்கு வரும் ஸேவார்த்திகள், கோவிலில் எச்சில் துப்புவது போன்ற அசுத்தங்கள் செய்யாமல் இருப்பது, தாங்கள் கொண்டுவந்த உணவினை உண்டபின் இலைகளைக் கோவிலினுள் போட்டு அசுத்தம் செய்யாது இருப்பது, மற்றும் அவ்வாறு செய்பவர்களைத் தடுப்பது, தாங்கள் ப்ராகாரங்களை சுற்றி வரும்பொழுது அங்கு குப்பைகளைக் கண்டால், கண்டும் காணாதவர் போல் செல்லாமல் அவற்றை அப்புறப்படுத்துவது போன்ற மனோபாவங்கள் வளர வேண்டும். கோவில்களுக்குச் செல்லும்பொழுது கற்பூரம் எடுத்துச் செல்வது, எண்ணெய் எடுத்துச் செல்வது, மற்றும் பூஜா திரவியங்கள் எடுத்துச் செல்வதைக் காட்டிலும் இவை உயர்ந்தது என்பது ஸ்ரீ ஸ்வாமிகளின் அபிப்ராயம். நாயன்மார்களில் மிகவும் முக்யமானவரான திருநாவுக்கரசரே உழவாரப்பணி செய்து வந்ததை பார்க்கின்றோம். அம்பரீஷன் ராஜாவாக இருந்தும் நித்யம் கோவில்களுக்குச் சென்று தொண்டு செய்து வந்ததைக் காண்கின்றோம்.

திருப்பணிக் குழு அமைப்பவர்கள் கும்பாபிஷேகம் முடிந்தவுடன் அந்த குழுவைக் கலைத்துவிடாமல், அதை பராமரிப்பு குழுவாக மாற்றி கோவில் பராமரிப்பு பொறுப்பை ஏற்க வேண்டும். மேலும், பல கோவில்களில், 'ராஜகோபுரம் கட்டுகிறேன்! க்ரானைட்டாலோ, மார்பிளினாலோ தளம் போடுகிறேன்' என்றெல்லாம் கூறுகிறார்கள். அந்த கோவில்களுக்கு சென்று பார்த்தால், பூஜைகள் முறைப்படி நடப்பதில்லை (அதாவது, ஒரு காலம் பூஜை மட்டும் நடக்கும்) ஸ்வாமிக்கு சரியாக புஷ்பங்கள் நித்யபடி சாற்றுவதில்லை. அர்ச்சகரை, ''நீங்கள் ஏன் 3-4 கால பூஜைகள் செய்வதில்லை? ஏன் ஒரு காலம்தான் செய்கிறீர்கள்?'' என்று கேட்டால், அவர், ''எனக்கு ஒழுங்காக சம்பளம் வருவதில்லை. மூன்று, நான்கு கோவில்களுக்குப் பூஜை செய்துதான், என்னால் என் குடும்பத்தைக் காப்பாற்ற முடிகிறது. அதனால், என்னால் ஒரு காலம்தான் பூஜை செய்ய முடியும்'' என்று கூறுகிறார்.

மடப்பள்ளியில் சென்று விசாரித்தாலோ, ஸ்வாமிக்கு நிவேதனம் செய்யும் பாத்திரங்களையும், சூழ்நிலையையும் பார்த்தாலோ மனதிற்கு மிகவும் வேதனையாக உள்ளது. (சில

கோவில்களில் அலுமினிய பாத்திரங்களிலும் நிவேதனம் தயார் செய்யப்படுகிறது). அப்படியே தயார் செய்யும் நிவேதனமும் வாயில் வைக்க முடியாத அளவிற்கு மோசமாக உள்ளது. அவர்களிடம் ''ஏன் இவ்வளவு மோசமாக நிவேதனம் தயார் செய்கிறீர்கள்?'' என்று கேட்டால், ''எங்களுக்கு வரும் வருவாய் மற்றும் கிடைக்கின்ற பொருள்களை வைத்துக்கொண்டு, இவ்வளவுதான் முடியும்!'' என்கிறார்கள். பூஜைக்கும் நிவேதனத்திற்கும் ஏற்பாடு செய்யாமல் க்ரானைட், மார்பிளால் இழைப்பது எப்படி உள்ளதென்றால், நல்ல பசியோடு இருப்பவனுக்கு ஆபரணங்களை வாங்கிக்கொடுப்பது போலுள்ளது.

இதன் மூலம் நம் ஸ்வாமிகளின் அபிப்ராயம் என்னவென்றால், அவசியமான அளவில் கோவிலை செப்பனிட்டுவிட்டு, பெரிய அளவில் ராஜகோபுரம், மண்டபம் கட்டுவது, க்ரானைட் போடுவது ஆகியவற்றுக்கு நாம் செலவு செய்யும் நிதியை மூலதனமாகக் கொண்டு, அதன்மூலம் வரும் வட்டியைக்கொண்டு கோவிலில், பூஜை செய்பவர்களுக்கும் மடப்பள்ளி கைங்கர்யம் செய்பவர்களுக்கும் தகுந்த ஊதியம் கொடுத்து காலாகாலத்தில் அந்தந்த காலங்களில் பூஜைகளை விடாமல் செய்யச் சொல்லி நிவேதனத்தை நன்றாக சுத்தமான சூழ்நிலையில் தயார் செய்து, பவித்ரமாக பகவானுக்கு அர்ப்பணித்து, வரும் ஸேவார்த்திகளுக்கு விநியோகிக்கலாம் என்பதே ஆகும். மேலும், கோவில்களில் ஸ்வாமியை எழுந்தருளப் பண்ணும்பொழுது பலர் மதுபானம் செய்துவிட்டும், குளிக்காமலும், நம்முடைய மதத்திற்கு விரோதமான கைலி கட்டிக்கொண்டும். மேலும், இதுபோல் பல தோஷங்களுடனும் ஸ்வாமியை புறப்பாடு செய்வது மனதிற்கு மிகவும் வேதனையாக உள்ளது.

திருப்பதியிலும் கூட பலர் காக்கி கலர் நிஜாரும் சட்டையும் அணிந்து பெருமாளை புறப்பாடு செய்கின்றனர். இது ஸேவார்த்திகளின் பக்தி **பா**வத்தை பங்கப்படுத்தும். ப்ராஹ்மணர்கள்தான் புறப்பாடு செய்ய வேண்டும் என்பது ஸ்ரீ ஸ்வாமிகளின் கட்சி அல்ல. ஸ்வாமியை புறப்பாடு செய்பவர்கள் குளித்துவிட்டு அவர் அவர்களுடைய பக்திக்கு தகுந்தாற்போல் நெற்றிக்கு விபூதியோ, திருமண்ணோ இட்டுக்கொண்டு, வேஷ்டியும் துண்டும் மட்டும் கட்டிக்கொண்டு

பகவானுடைய நாமாக்களை சொல்லிகொண்டே புறப்பாடு செய்தால் போதும். மிகவும் அழகாக இருக்கும். இது நடைமுறைப்படுத்த முடியாத விஷயமல்ல.

சபரிமலைக்குச் செல்பவர்கள் அவர்கள் செல்லும்பொழுது அப்படித்தானே செல்கின்றனர். மேலும், அந்த அந்த கோயில்களில் அந்த அந்த கோவில் விஷயமாக ஆழ்வார்களோ, நாயன்மார்களோ பாடிய பதிகங்களை சுவற்றில் எழுதி வைக்கவேண்டும். துண்டு பிரசுரங்களினால் அவற்றையும், அவற்றின் பொருளையும், மேலும் அந்த க்ஷேத்ரத்தின் பெருமையையும், அந்த ஊரில் குடிகொண்டவர்கள் பிறருக்கு விநியோகித்து, ஸம்பந்தப்பட்ட கோயில்களைப் பற்றி ஓரளவாவது விஷய ஞானத்தை ஏற்படுத்த வேண்டும். இன்று நாத்திகர்கள் கேட்கும் கேள்விகளுக்கு தகுந்தவர்களைக்கொண்டு பதில்கள் எழுதி ஒவ்வொரு கோவிலிலும் ஸேவார்த்திகள் பார்க்கும் இடத்தில் வைக்கவேண்டும்.

கோயில்களில் பூஜை செய்பவர்கள், வரும் ஸேவார்த்திகள் அனைவரிடமும் எந்த வித்யாசமும் பார்க்காமல் அன்புடன் பேசி ஆலய தர்சனம் செய்வதை ஊக்குவிக்க வேண்டும். அதுபோல், ஒவ்வொரு ஊரிலும் நின்றுபோன உத்ஸவங்களை ஓரளவிற்காவது சிறிய அளவில் நடத்த முற்பட வேண்டும். முடிந்தவரை அந்த அந்த ஊரில் உள்ள பக்தர்கள் அந்தந்த ஊரிலேயே வஸிக்க வேண்டும். மேலும், அந்த ஊரைச் சேர்ந்தவர்கள் உத்யோக நிமித்தம் வெளியூரில் வஸிக்க நேர்ந்தால், அவர்கள் retiredஆன பிறகு தனது சொந்த ஊரிலேயே வந்து settleஆகி ஆலயங்களில் உள்ள கார்யங்களில் ஈடுபட வேண்டும்.

இன்று எல்லா இடங்களிலும் ஆன்மீகத்தில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளதை காணும் நம் ஸ்வாமிகள், இந்த தருணத்தை நாம் நன்றாக பயன்படுத்திக்கொண்டு மக்களுடைய மனத்தில் பக்தியை வேரூன்றி வைக்கத் தவறிவிட்டோமானால், கூடிய சீக்கிரமே மிகவும் மோசமான சூழ்நிலை உருவாகிவிடும் என்று கவலை கொள்கின்றார்கள். இதற்கு பிற்காலத்தில் வருந்தி ப்ரயோஜனமில்லை என்பதே அவருடைய கவலை. (தொடரும்)

**– ஆ. பாக்யநாதன்**

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள்

*கேள்வி : ஒரு ஞானியால்தான் மற்றவர்களுடைய ஆன்மீக ஸ்திதியைப் புரிந்துகொள்ள முடியுமா?*

பதில் : ஒரு ஞானியால் மற்றவர்களுடைய ஆன்மீக ஸ்திதியை புரிந்துகொள்ள முடியும். சில உபாஸகர்கள் தங்களுடைய உபாஸனா தேவதைகளுடன் பேசுவதும் உண்டு. அவர்களுடைய உபாஸனா தேவதை அவர்களுக்கு மற்றவருடைய ஆன்மீக ஸ்திதியை நன்றாக உணர்த்தி விடும்.

*கேள்வி : உலகில் இன்று பல ஸ்வாமிகள் கிளம்பிவிட்டார்கள். அவர்களை பெரிய கூட்டம் பின்பற்றுகின்றதே?*

பதில் : இன்று உலகில் இதுபோன்ற ஸ்வாமிகளால் கவரப்பட்டு, பெரிய கூட்டங்கள் அவர்கள் பின்னால் செல்கின்றன. எந்த ஸ்வாமிகளைப் பின்பற்றி இவர்களெல்லாம் செல்கின்றனரோ, அவரே ஒரு உண்மையான மஹானைத் தேடிக்கொண்டிருப்பார்.

*கேள்வி : நானும் எனது நண்பரும் இமயமலையிலுள்ள ஒரு உண்மையான ஸாதுவை ஸந்தித்தோம். அந்த ஸாது எனது நண்பனை தனது ஸ்பர்ஸ தீக்ஷையால் உயர்ந்த ஆன்மீக நிலைக்கு அழைத்துச் சென்றார். அப்பொழுது அவன் பகவானின் பல திவ்ய காட்சிகளைக் கண்டான். ஆனால், சிறிதுகாலம் வரை அந்த நிலையில் இருந்த அவன் இப்பொழுது ஒரு சாதாரண நபரைப்போல் வாழ்ந்து வருகிறான். இது ஏனென்று எனக்கு புரியவில்லை?*

பதில் : யுத்தம் செய்ய அர்ஜுனன் மறுத்தபொழுது, பகவான் ஸ்ரீ க்ருஷ்ணன் அவனுக்கு தன் விஸ்வரூப தரிசனத்தைக் காண்பித்தான். அதில் மயங்கி, மோஹித்த அர்ஜுனனும் சிறிது காலத்தில் சராசரி நிலைக்கு வந்துவிட்டான். எனவே, உயர்ந்த ஜீவன் முக்தி ஸ்திதியை அடையும்வரை, எந்த உயர்ந்த ஆன்மீக நிலையில் இருந்தும் ஒருவன் தவறி விழுந்துவிட முடியும் என்பதே இதனால் தெரியும் உண்மை.

*கேள்வி : நான் ஒருவரை சந்தித்தேன். அவர் அதிகமாக சாப்பிடுவதில்லை. பலநாட்கள் உபவாசம் இருக்கிறார். உடம்பை மிகவும் வருத்திக்கொள்கிறார். ஸதா ஒரு மந்திரத்தை ஜபம் செய்து வருகிறார். அவரை நான் பெரிய தபஸ்வியாகப் பார்க்கின்றேன். நான் அடிக்கடி அவரைச் சென்று தரிசித்து வரலாமா?*

பதில் : நீங்கள் சொல்வதெல்லாம் வாஸ்தவமாக இருந்தபோதிலும் கூட, ஒருவர் மஹாத்மா என்பதற்கு அடையாளம் கடுமையான ஸாதனைகள் மட்டுமல்ல, அவருடைய மனோபாவம்தான் மிகவும் முக்கியமானது. பிறருடைய நாசத்திற்காக கூட சிலர் தவம் இயற்றுவதுண்டு. காமம், க்ரோதம், அசூயை இவற்றையெல்லாம் வெல்லாதவர்களின் கைகளில் தபஸ் சேர்வது ஆபத்தானது. எனவேதான் பகவானும், தபஸ் செய்பவர்களை காமம், க்ரோதம் ஆகியவற்றைத் தூண்டும் வகையில் பலவாறும் பரீக்ஷிக்கிறான். அவர்கள் அவற்றில் தவறி விழுந்துவிட்டால் அவர்களது தபசும் அழிந்து விடுகிறது. அதுவே, பகவானின் ஸங்கல்பம். ஏனெனில், அத்தகையவர்கள் தங்கள் தபோசக்தியைக்கொண்டு பிறரைத் துன்புறுத்துவர். அவ்வாறு அந்த பரீக்ஷைகளை ஒருவன் தாண்டி விடுவானாகில் அவன் ஸாத்வீக குணமுடையவனாகிறான். அவனது தபஸானது லோக க்ஷேமத்திற்காகவே பயன்படுகிறது. ஸ்ரீமத்பாகவதத்திலும் ஹிரண்யகசிபுவின் தபஸைக் கண்டு ப்ரஹ்மாவே, ''உன்னைப்போல் யாரும் தபஸ் செய்ய முடியாது!'' என்று வியக்கிறார். ஆனால் ஹிரண்யகசிபுவை யாரும் மஹான் என்று ஏற்றுக்கொள்வதில்லையே!

*கேள்வி : நான் ஸமீபமாக ஆங்கிலத்தில் ஒருவர் எழுதிய புத்தகத்தை படித்தேன். அவருடைய ஆங்கில சொற்பொழிவையும் கேட்டேன். அவர் சொல்லது, எழுதுவது எல்லாம் அத்வைத பரமாகவே உள்ளது. அவருக்கு அத்தகைய உயர்ந்த ஞானம், ஸித்தித்திருப்பதாகவே எனக்கு தோன்றுகின்றது.*

பதில் : ஒருவர் அத்வைத ஸித்தாந்தத்தை மட்டுமல்ல, எந்த கிரந்தத்தை பற்றி பேசினாலும் அந்த விஷயங்கள் அவருக்கு அனுபவத்தில் இருக்க வேண்டிய அவச்யமில்லை. உண்மையில்

உயர்ந்த அத்வைத நிலையை அடைந்த ஞானிக்கு பேச்சு அடங்கி விடும். அனுபவம் வேறு. அறிவு வேறு. ஆதிசங்கர பகவத் பாதாள் விவேக சூடாமணி என்ற கிரந்தத்தில், ஒருவன் ''ராஜ ஸபையில் மிகவும் ரம்யமாக வீணாகானம் செய்தால். அதனால் மகிழ்ந்து ராஜா அவனுக்கு தனது கழுத்தில் உள்ள உயர்ந்த ஹாரத்தை ஸன்மானமாக தருவானே அன்றி, அவனுக்கு தன்னுடைய ராஜ பதவியை தந்து விடமாட்டான்'' என்கின்றார்.

---

ஆதிஶங்கர பகவத்பாதாள் காசி க்ஷேத்ரத்தில் கங்காஷ்டகம் செய்கின்றார். அதில் ''கங்கா தீரத்திலேயே வஸித்துக்கொண்டு, பிக்ஷை எடுப்பதையும் விட்டு கங்கை நீரை மட்டும் பருகிக் கொண்டு, எல்லா விஷயத்தையும் தியாகம் செய்துவிட்டு க்ருஷ்ணனையே ஆராதித்துக்கொண்டு இருக்கமாட்டேனா?' என்கின்றார். காசி க்ஷேத்ரத்தில் கங்கை விஷயமாக பண்ணும் ஸ்லோகத்தில் அந்த க்ஷேத்ர தேவதைகளான விஶ்வநாதரையோ, விசாலாக்ஷியையோ, அன்னபூர்ணியையோ குறிப்பிடாமல் க்ருஷ்ணரை சொல்வதிலிருந்து ஆசார்யரின் க்ருஷ்ண பக்தி ப்ரகாஶமாகின்றது. ''பகவதி தவதீரே நீர மாத்ராஶநோஹம் விகத விஷய த்ருஷ்ண: க்ருஷ்ணம் ஆராதயாமி''.

**- ஆதிசங்கரரின் கங்காஷ்டகம்**

---

யாஜ்ஞவல்க்ய மஹரிஷி தனது இரு பத்தினிகளிடமும், ''நான் அனைத்தையும் துறந்து தனிமைக்குச் செல்கிறேன். எனவே, உங்களுக்கு என்ன சொத்து வேண்டுமென்று கேட்டுப் பெற்றுக் கொள்ளுங்கள்'' என்கிறார். அவர் ஜனகருக்கு ப்ரஹ்மோபதேசம் செய்து, ஜனகரிடம் பல ஸன்மானங்களைப் பெற்றவர். அவரது பத்தினியான மைத்ரேயி அவரிடம், உங்களுக்கு ஜனகர் கொடுத்ததையெல்லாம் காத்யாயனிக்கு கொடுத்துவிடுங்கள். தாங்கள், ஜனகருக்கு எதை கொடுத்தீரோ அதை எனக்கு கொடுக்கவும் என்று ப்ரார்த்தித்தாள்.

**- ப்ருஹதாரண்ய உபநிஷத்**

# வேத கதைகள் - 57

- தர்மஜ்ஞர், வாங்முக ஸார்வபௌம, மேலக்காவேரி
ப்ரஹ்மஸ்ரீ பஞ்சாபகேஶ ஶாஸ்த்ரிகள்

## ப்ரஜாபதியின் உபதேசம்

தேவர்கள், மனிதர்கள், அரக்கர்கள் மூவரும் ப்ரஜாபதியின் பிள்ளைகள். ஒரு ஸமயம், தேவர்கள் ப்ரஜாபதியை தனிமையில் ஸந்தித்து உபதேசம் செய்யுமாறு வேண்டினர். **த** என்ற எழுத்தை மட்டும் ப்ரஜாபதியானவர் தேவர்களுக்கு உபதேசித்தார். **த** என்ற எழுத்தைக் கூறிவிட்டு, புரிந்ததா? என்று தேவர்களைக்கேட்டார். அவர்களும், புரிந்தது என்று பதில் கூறினர். தேவர்கள், செல்வத்தில் மிதப்பவர்கள். ஆதலால், அவர்களுக்கு அடக்கம் இல்லை. ஆதலால், ''தாம்யதா என்று எங்களுக்கு உபதேசம் செய்தீர்கள் என்று அறிந்து கொண்டோம். தாம்யதா என்ற பதத்தில் முதல் எழுத்து **''த''.** எங்களுக்கு அடக்கம் வேண்டும்'' என்று தேவர்கள் கூறினர். நானும், ''த'' என்ற எழுத்தால் அவ்விதம் தான் உபதேசம் செய்தேன் என்று ப்ரஜாபதியும் கூறினர். தேவர்களும் மகிழ்ச்சியுடன் சென்றனர்.

பிறகு, மனிதர்கள் ப்ரஜாபதியை அணுகி உபதேசிக்க வேண்டினர். ப்ரஜாபதியும் **த** என்றே உபதேசம் செய்தார். மனிதர்களும், **''த** என்றால் தத்த என்று பொருள். பிறருக்கு கொடுப்பதில் எங்களுக்கு எண்ணமே இல்லை. **தத்த** என்றால் கொடுங்கள் என்று பொருள். **த** என்ற உபதேசத்தால் கொடுக்கும் மனப்பான்மை வேண்டும் என்று உபதேசம் செய்ததாக நாங்கள் அறிந்து கொண்டோம்'' என்று கூறி ப்ரஜாபதியிடம் விடைபெற்றுச் சென்றனர்.

பிறகு அரக்கர்கள் அவரை அணுகி உபதேசம் வேண்டினர். அவர்களுக்கும் **த** என்றே உபதேசித்தார். **த** என்றால் தயத்வம்; இரக்கப்படுங்கள் என்று பொருள். அரக்கர்களுக்கு இயற்கையாகவே இரக்கம் இல்லை. ''பிறரை துன்புறுத்தாதீர்கள் இரக்கப்படுங்கள் என்று உபதேசம் செய்தீர்கள்'' என்று கூறி ப்ரஹ்மாவை வணங்கி சென்றனர். இங்கு ப்ரஜாபதியானவர், மூவருக்கும் **த** என்ற எழுத்தையே

உபதேசித்தார். ஆனாலும் அவரவர்கள் தங்களுக்கு இயற்கையான மனப்பான்மையை பின்பற்றி பொருள் அறிந்துகொண்டனர்.

தேவர்கள், மனிதர்கள், அரக்கர்கள் என்று தனிப்பட்டு ஒருவரும் இல்லை. மனிதனே செல்வசெருக்கு ஏற்படும்போது, தான் உயர்ந்தவன் என்று எண்ணும்போது அவனே தேவன் ஆகிறான். இந்த செல்வசெருக்கு விலகவேண்டும். இவ்விதம் கஞ்சத்தனம் இருக்கும்பொழுது மனிதனாகிறான். ஆதலால் கஞ்சத்தனம் விலக, கொடுக்கவேண்டும். பிறரை துன்புறுத்தும்போது மனிதனே அரக்கன் ஆகிறான். அரக்கத் தன்மை விலகி இரக்கத் தன்மை ஏற்படவேண்டும். ஆதலால், ப்ரஜாபதியின் இந்த உபதேசம் மனிதர்களான நமக்குத்தான். இந்த கதை ப்ருஹதாரண்ய உபநிஷத்தில் இருக்கிறது. இந்த கதையை மனதில் வைத்து காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு மஹாஸ்வாமிகள் ''மைத்ரீம் பஜத'' என்ற பாட்டில், தாம்யத, தத்த, தயத்வம் ஜனாத: என்று மனிதர்களுக்கு உபதேசம் செய்திருக்கிறார்கள். இந்த கீர்த்தனம் ஐக்கிய நாடுகள் (United Nations) சபையில் M.S. சுப்புலட்சுமி அவர்களால் பாடப்பட்டது.

---


ஸ்ரீ ஹரி:

**மதுரமுரளி வருட சந்தா**

சந்தாதாரர்கள், ''மதுரமுரளி''க்கான தங்களது சந்தாவை ''குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்'' என்னும் பெயரில் மட்டுமே, ரொக்கம் / M.O. / DD யாக தங்கள் பெயர், முகவரி, சந்தா எண். தொலைபேசி எண். உள்ளிட்ட விவரங்களுடன் மிஷன் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டுகிறோம். தயவுசெய்து காசோலையாக சந்தாவை அனுப்ப வேண்டாம்.

| | | |
|---|---|---|
| உள்நாடு | : | ஆண்டு சந்தா ரூ. 60/- |
| | | மூன்றாண்டு சந்தா ரூ. 180/- |
| | | ஆயுள் சந்தா ரூ. 750/- |
| வெளிநாடு | : | ஆண்டு சந்தா ரூ. 300/- |

# எந்தரோ மஹானுபாவுலு - 48

முராரிகுப்தா பரம தார்மிகர், சுத்தமான வைஷ்ணவர். ஆனால், அவருக்கு தர்க்க விதர்க்கங்களிலும், ஶாஸ்த்ர அர்த்தத்திலும் விருப்பம் அதிகம். ப்ரபு அவரை நோக்கி, ''முராரி! நீ பூர்ண பக்தனாவதற்கு தடையாக இருப்பது இந்த வறட்டு வாத விவாதங்கள்தான். இவற்றை விட்டுவிட்டு அத்யாத்ம ஶாஸ்த்ரத்தில் பக்தி க்ரந்தங்களுக்கு முக்கியத்துவம் கொடு'' என்றார். முராரி, ''நான் வாதவிவாதம் வேறெங்கும் செய்வதில்லையே! வித்வான்களிடம் ப்ரசங்கம் ஏற்பட்டால்தானே செய்வேன்'' என்றார். ப்ரபு, ''நீ அத்வைதாசார்யரிடம் அத்வைத வேதாந்த விஷயத்தில் தர்க்க விதர்க்கம் செய்வதில்லையா என்ன?'' என்று வினவினார்.

அத்வைதாசார்யர், ''ப்ரபோ! அத்வைத வேதாந்த விஷயங்கள் பேசுவது கூடவா தவறு?'' என்று கேட்டார். ப்ரபு சிரித்துக்கொண்டே, ''தவறு என்று சொன்னேனா? நல்லதுதான். ஆனால், பக்திவழியில் செல்பவனுக்கு இப்படிப்பட்ட வாதவிவாதங்களின் சுழற்சியில் சிக்குவதால் என்ன பயன்?'' என்று கூறிவிட்டு,

*''ந ஸாதயதி மாம் யோகோ ந ஸாங்க்யம் தர்ம உத்தவ |*
*ந ஸ்வாத்யாயஸ்தபஸ்த்யாகோ யதா பக்திர் மமோர்ஜிதா ||*

**(ஶ்ரீமத் பாகவதம்.** 11/14/20)

என்ற ஸ்லோகத்தை கம்பீரமான குரலில் உரக்கப் பாடினார். ப்ரபுவின் இப்படிப்பட்ட ஆணையைக் கேட்ட முராரி மௌனமானார். ப்ரபு மேலும் கூறினார், ''முராரி! உனக்கு ப்ரஹ்மத்தை அடைய வேறு ஸாதனங்களை ஶரணடைய வேண்டிய அவச்யம் என்ன? உனக்குத்தான் பகவான் ஜன்ம ஸித்தமாக உள்ளானே! நீ ப்ரபுவின் ஜன்ம ஜன்மாந்திர பக்தர். உன்னுடைய **பா**வமும் ரூபமும் ஹனுமனைப் போல் உள்ளன. நீ ஸாக்ஷாத் ஹனுமானேதான். உன்னுடைய நிஜரூபத்தை ஸ்மரித்துக்கொள்'' என்றார். முராரி ராமபக்தர். ப்ரபு நினைவு மூட்டியதும் அவர் தனது இஷ்ட தேவதையை த்யானித்தார். அவருக்கு தான் ஸாக்ஷாத் ஹனுமானாகவும், தான் ராமசந்திர ப்ரபுவின் சரணத்தில் அமர்ந்து அவரைப் பூஜை செய்வது போலவும்

அனுபவம் ஏற்பட்டது. கண்களை உயர்த்தி ப்ரபுவை நோக்கினால் ப்ரபு ஸாக்ஷாத் சீதாராமனாக அவருக்கு தர்சனம் தந்தார். ப்ரபுவின் திருமேனி முன் இஷ்டதேவதையின் ஸ்தோத்திரங்களைக் கூறிக் கொண்டு விழுந்து விழுந்து நமஸ்கரித்தார். ப்ரபுவிடம் கைகூப்பிக் கொண்டு அசஞ்சல ஸ்ரீராம பக்தியை வரதானமாகக் கேட்டார். ப்ரபுவும் தனது சரணகமலங்களை அவரது சிரஸ்ஸில் வைத்து அனுக்ரஹம் செய்தார்.

பிறகு மற்ற பக்தர்களின் முறை வந்தது. அத்வைதாசார்யர், ஸ்ரீவாஸ், வாஸுதேவ் ஆகியோர் அஹைதுகீ (எந்த எதிர்பார்ப்பும் காரணமும் இல்லாத) பக்தியை வேண்டினர். ஹரிதாஸ், தன்னை எப்பொழுதும் மிகவும் தாழ்ந்தவராகவும் அதமராகவுமே நினைத்துக்கொள்வார். எனவே, ஸங்கோசத்துடன் ஒதுங்கி நின்று கொண்டிருந்தார். ப்ரபுவே, ''ஹரிதாஸ் எங்கே? அவனை என் முன் நிறுத்துங்கள்'' என்றார். எல்லோரும் நாற்புறமும் தேடினர். அவரோ அனைவருக்கும் பின்னால் வெட்கத்துடன் ஒளிந்து கொண்டிருந்தார். ப்ரேமையில் பாதி நினைவிழந்திருந்தார். பக்தர்கள் அவரை ஒருவாறு அணைத்துக்கொண்டு ப்ரபுவின் முன் நிறுத்தினர்.

ப்ரபு, ''ஹரிதாஸ்! நீ உன்னை நீசனாக ஒரு போதும் எண்ணாதே! நீ ஸர்வஶ்ரேஷ்டன்! நானும் நீயும் ஒரே ஜாதி! யார் உன்னை ஸ்மரிக்கிறார்களோ அவர்கள் என்னையே பூஜை செய்கிறார்கள்! நான் ஸதா உன்னுடனே இருக்கிறேன். உன் முதுகில் எப்போது அடி விழுந்ததோ அப்பொழுதும் நான் உன்னுடன் தான் இருந்தேன். அந்த கசையடிகள் என் முதுகில்தான் விழுந்தன பார்! இப்போதுகூட என் முதுகில் அவற்றின் தழும்புகள் உள்ளன! அனைத்து பக்தர்களின் கஷ்டங்களையும் நான் என்மேல்தான் ஏற்றிக் கொள்கிறேன். இதனால்தான் பக்தர்களுக்கு மலை போன்ற கஷ்டங்களும், துக்கங்களை அளிப்பதில்லை. பக்தர்களுக்கு கஷ்டமளிப்பவர்கள் எனக்குத்தான் கஷ்டத்தைத் தருகிறார்கள். நீ என்னிடம் துஷ்டர்களை ஸம்ஹாரம் செய்யுமாறு வேண்டிக் கொள்ளவேயில்லையே! அவர்களைத் திருத்தி, புத்தி சுத்தி செய்து, உத்தாரணம் செய்யத்தானே வேண்டினாய்! அதனால் நானும் துஷ்டர்களை ஸம்ஹாரம் செய்யாமல் உத்தாரணம் செய்வேன்.

நானும் என்னுடைய மதுரமான நாம ஸங்கீர்த்தனத்தால் துஷ்டர்களையும் திருத்துவேன்! உன்னுடைய மனோபீஷ்ட வரங்களைக் கேட்டுப் பெற்றுக் கொள்!'' என்று ப்ரேமையுடன் சொன்னார்.

இருகரங்களையும் கூப்பிக்கொண்டு ஹரிதாஸ் தீனமாக, ''ஹேப்ரபோ! வரமளிப்பதில் ஶ்ரேஷ்டரே! ஹே தயாளோ! ஹே ப்ரேமாவதார! உங்களுக்கு எனக்கு வரமளிக்க இஷ்டமானால், நான் எப்போதும் தீனமானவனாகவும், தரித்ரனாகவும், விரக்தனாகவும் இருக்க அருள் புரியுங்கள். ப்ரபுவுக்கு தாஸனாக இருப்பதைத் தவிர வேறு எந்த அபிலாஷையும் எனக்கு உண்டாகாமலிருக்க வேண்டும். ஸதா வைஷ்ணவர்களின் பாததூளியை என் சிரஸ்ஸில் பூஷணமாகத் தரித்து மகிழ வேண்டும். வைஷ்ணவர்களின் சரணத்தில் எனக்குப் ப்ரீதி நிலைத்து இருக்க வேண்டும். இந்த வரதானம் தான் உங்களிடம் நான் யாசிப்பது!'' என்றார். பக்த மண்டலத்தில் இந்த ப்ரார்த்தனைகளைக் கேட்டு ஆனந்த த்வனி ஏற்பட்டது. அனைவரும் ஹரிதாஸை மனமாரப் புகழ்ந்து கொண்டிருந்தனர். ப்ரபுவும் ஆனந்தித்து புன்முறுவல் பூத்தார்.

முகுந்ததத், தன்னை ப்ரபு தர்சனத்திற்கு அருஹதை அற்றவன் என்று எண்ணி ஒதுங்கி இருந்தார். ஶ்ரீவாஸ் பண்டிட் ''ப்ரபோ! முகுந்ததத்தும் தங்களது ப்ரியனாயிற்றே! அவர்மீதும் நீங்கள் க்ருபை செய்ய வேண்டாமா? தன்னை உங்கள் தரிசனத்திற்கு அதிகாரி இல்லை என்று நினைத்து ஒதுங்கி உள்ளான்'' என்றார். ப்ரபு சிறிது ரோஷத்துடன், ''முகுந்ததத் மீது க்ருபை செய்ய மாட்டேன். தன்னை பக்தன் என்று சொல்லிக்கொண்டு ஸதா தர்க்கம் செய்துகொண்டிருக்கிறான். பண்டிதர்கள் ஸபையில் வைஷ்ணவ லீலைகள் விளையாட்டுக்கள் என்று சொல்கிறான். தன்னை ஞானி என்றும் வித்வான் என்றும் எண்ணிக்கொண்டிருக்கிறான். இவனுக்கு எப்படி பகவான் தர்சனம் தருவான்?'' என்றார்.

முகுந்ததத் அழுதுகொண்டே, ஶ்ரீவாஸிடம், ''நான் எப்பொழுது பகவத் க்ருபைக்கு பாத்திரமாவேன்'' என்று கேட்டார். இதையே ஶ்ரீவாஸ், ப்ரபுவிடம் கேட்டார். ப்ரபு சிறிது உபேக்ஷை செய்யும் பாவத்துடன், ''ஆமாம் ஆமாம். கோடி ஜன்மத்துக்குப் பிறகு அதிகாரி ஆகலாம்'' என்றார். இதைக் கேட்டாரோ இல்லையோ

முகுந்ததத், ஆனந்தக் கூத்தாட ஆரம்பித்தார். ''எப்போதாவது ஏற்பட்டால் சரி. எப்போதாவது ஏற்பட்டால் சரி'' என்று நடமாடினார். கோடி ஜன்மம் சீக்கிரம் முடிந்துவிடும். நிறைய காலம்தான். ஆனால் என்ன? கடைசியில் பகவத் க்ருபைக்குப் பாத்திரமாவேனே!'' என்று ஆனந்தித்தார். இவரது இந்த நிலையைக் கண்டு மற்ற பக்தர்களுக்கு ஆச்சர்யம் உண்டாயிற்று. இப்படிப்பட்ட த்ருட நிஷ்டையைக் கண்டு ஸ்தம்பித்துவிட்டனர்.

கடைசியில் ப்ரபு முகுந்ததத்தை இழுத்து, ப்ரேமாலிங்கனம் செய்துகொண்டு, ''முகுந்தா! உனது இப்படிப்பட்ட அசையாத நம்பிக்கையால் என்னை விலைக்கு வாங்கிவிட்டாயே! நீதான் உண்மையான வைஷ்ணவன். என்னுடைய ஆனந்தத்திற்கு அளவே இல்லை! நீதான் பகவத் க்ருபைக்கு ஸர்வஸ்ரேஷ்ட அதிகாரி! உன்னுடைய பேச்சுக்கள் என் ஆனந்தத்தை லக்ஷம் முறை அதிகரித்துவிட்டது! முகுந்தா! உன்னைப் போன்ற தைரியசாலியும் உயர்ந்த நிஷ்டையும் உள்ளவன் ஸாதாரண மனிதர்களிடையே பார்ப்பது மிகமிக அரிது. என்னுடைய தேஜோமயமான ரூபத்தைப் பார்!'' இப்படிக் கூறிக்கொண்டே ப்ரபு முகுந்ததத்திற்கு தனது அலௌகிகமான ரூபத்தைக் காட்ட அவர் மூர்ச்சித்து தரையில் விழுந்தார்.

பிறகு மற்ற பக்தர்களும் அவரவர் **பா**வனைக்கேற்ப ஶ்யாம வர்ண, முரளிமனோஹர, சீதாராம, ராதாக்ருஷ்ண, மற்றும் இதர தேவதேவி ரூபங்களை ப்ரபுவின் சரீரத்தில் யாசித்து தர்சித்து மகிழ்ந்தனர்.

(தொடரும்)

**– ஜயந்தி ஜானகிராமன்**

---

உன்னதமான இறைவனை அறிந்தவருக்கு சொர்க்கமும், தீர செயல்கள் புரிகிற வீரனுக்கு வாழ்க்கையும், இச்சைகளைக் கட்டுப்படுத்தியவனுக்கு பெண்ணும், ஆசையற்றவனுக்கு உலகமும் துரும்புக்கு ஸமானம்.

- **சாணக்ய நீதி**

# ஸனாதனப் புதிர் - பகுதி - 12

தொகுப்பு : **''ஆத்ரேயன்'',** சென்னை.

1. நாஸிக் எந்த நதிக்கரையில் அமைந்துள்ளது?
2. இந்திரன் தனது அரியணையில் அர்ஜுனனுடன் அமர்ந்திருந்த பொழுது அதைப் பார்த்து வியப்படைந்த முனிவர் யார்?
3. கௌரவ தரப்பில் பீஷ்மர், துரோணர் போன்ற பல சேனாதிபதிகள் இருந்தனர். அர்ஜுனன் மஹாபாரதப் போரில் கொன்ற ஒரு சேனாதிபதி யார்?
4. கங்கை நதியில் ப்ரஹ்மாண்டமான முதலையின் வாயிலிருந்து துரோணாசாரியாரை அர்ஜுனன் காப்பாற்றியபொழுது, துரோணாசார்யர் அர்ஜுனனுக்குக் கொடுத்த ஆயுதம் எது?
5. விஷ்ணுவின் எந்த அவதாரத்தில் கேரளா கடலில் இருந்து உருவாக்கப்பட்டது?
6. இமயமலையில் உள்ள ஒரு கோவிலில் கேரளத்தைச் சார்ந்த நம்பூதிரி ப்ராமணர்கள் 'ரேவல்' என்ற தலைமைப் புரோகிதர்களாக பூஜை செய்கின்றனர். அந்தக் கோயில் எங்கே உள்ளது?
7. ''வாழ்வின் விஞ்ஞானம்'' என்பதைக் குறிக்கும் ஸம்ஸ்கிருத சொல் எது?
8. பாடலிபுத்திரம் என்னும் நகரை நிர்மாணித்த, புத்தரின் ஸமகாலத்தவர் யார்?
9. விஷ்ணுவின் ஒரு அவதாரத்தில் அவருக்கு பிள்ளையாருடன் போரிடும்படி நேர்ந்தது. எந்த அவதாரத்தில்? ஏன்?
10. கர்னாடகத்தில் உள்ள ப்ரஹ்மகிரி மலையில் உற்பத்தியாகும் நதியின் பெயர் என்ன?
11. ஜடாயுவின் அந்திமச் சடங்குகளை ராமர் எந்த நதிக்கரையில் செய்தார்?
12. ஹரிஹரன் என்று பாதி விஷ்ணுவாகவும் பாதி சிவனாகவும் உள்ள லிங்கம் இந்தியாவில் எந்த ஊரில் இருக்கிறது? அந்தக் கோயிலின் பெயர் என்ன?

13. தேவி மஹாத்ம்யம் என்றும், துர்கா சப்தசதீ என்றும் சொல்லப்படும் எழுநூறு மந்த்ரங்கள் எந்த புராணத்தில் காணப்படுகின்றன?
14. விஷ்ணு ஸஹஸ்ரநாமம் எந்த இதிஹாஸத்தில் காணப்படுகிறது?
15. பார்த்தனுக்கு ஸாரதியாக வர பகவான் க்ருஷ்ணன் ஸம்மதித்தது மஹாபாரதத்தின் எந்த பர்வாவில் காணப்படுகிறது?

---

ஸனாதனப் புதிர் பகுதி - 12க்கான பதில்களை
ஏப்ரல் 26-ந் தேதிக்குள் அனுப்பவேண்டும்.

---

ஸனாதனப்புதிர் - 11-க்கான பதில்கள்

1. அசலன், விருஷாகன் (சுபலனின் புதல்வர்கள்)
2. அஜாமுகி, இல்வலன், வாதாபி.
3. 7-வது பர்வம் - 64-வது அத்யாயம்.
4. கடோத்கஜனின் பிள்ளை - பீமனின் பேரன். அஸ்வத்தாமாவால் கொல்லப்பட்டான்.
5. பீஷ்மர்.
6. இரண்டு மாதங்கள் - சாந்தி பர்வம்.
7. இந்த மாதுஸ்ரீ 10 ரிஷிகளை மணந்தாள் - 3-வது பர்வம் 157-வது அத்யாயம்.
8. சுகுமாரி - ஸ்ருன்ஜயன்
9. மூன்று முறை (1, 28, 70 ஸ்லோகங்கள்)
10. அஹிம்ஸா, இந்த்ரிய நிக்ரஹம், தயா, க்ஷமா, ஶாந்தி, தபஸ், ஞானம், ஸத்யம்.

---

ஸனாதனப் புதிர் - பகுதி - 11க்கான
பதில்களை அனுப்பி பரிசு பெற்றவர்கள் விவரம்.

**முதல் பரிசு ரூ.** 250/-

Sri. C. Krishnaswami, 23 (32), Jambulinga Naickan Street, Chennai - 34.

**இரண்டாம் பரிசு ரூ.** 150/-

Sri. S. Saranathan, 10/21, Ranganathan Street, Nehru Nagar, Chennai-44.

# உவமைக்கோர் கம்பநாட்டாழ்வான் - 5

சீதாபிராட்டியை அசோக வனத்தில் தர்சனம் செய்துவிட்டு, அந்தச் செய்தியை ராமபிரானிடம் சொல்லும் கட்டத்தை கம்பநாட்டாழ்வார் பாடும்பொழுது **'கண்டனென், கற்பினுக்கு அணியை, கண்களால்,** என்று பாடுகின்றார். சொல்லின் செல்வனான ஹனுமான் ஒவ்வொரு வார்த்தையையும் அளந்தே மிகவும் ஜாக்ரதையாக பேசக்கூடியவன். அப்படிப்பட்ட ஹனுமான், செய்தியை சொல்லும் கட்டமாக அமைந்த பாடலில் கண்டனென், என்ற பதமும் அதற்கு அடுத்த பதமான கற்பினுக்கு அணியை என்ற பதமும் பொருத்தமானவைகளே. துயரத்தோடு காத்திருக்கும் ராமபிரானிடம் முதல் சொல்லாக தான் சீதையை கண்டுவிட்டதை 'கண்டனென்' என்ற பதத்தால் மிகவும் அருமையாக குறிப்பிடுகின்றார்.

அடுத்ததாக, ''நீ சீதையைப் பார்த்து விட்டாய். ஆனால், அவள் பவித்ரமாக இருக்கின்றாளா'' என்ற துடிப்பு ராமபிரானுக்கு வரும் என்றுணர்ந்து 'கற்பினுக்கு அணியை', என்ற பதத்தை போடுகின்றார். அடுத்ததாக, 'கண்களால்' என்ற பதத்தைதான் நாம் நன்றாக கவனிக்க வேண்டும். ஒருவர் கண்களால்தானே பார்ப்பார்கள். இங்கு எல்லா பதங்களும் மிகவும் கவனமாக பயன்படுத்த வேண்டியதாக இருக்க, 'கண்களால்' பார்த்தேன் என்பது அவச்யமற்றதுதான் என்று தோன்றும். ஆனால், இது ஆழ்ந்த காரணத்தைக்கொண்டு பயன்படுத்திய பதம் ஆகும்.

ஹனுமான் பிராட்டியை பார்த்துவிட்டான். அவள் கற்புடன்தான் இருக்கின்றாள் என்பதை தெரிந்துகொண்ட ராமபிரானுக்கு மற்றும் ஒரு கவலை வரும். அதாவது ஹனுமானுக்கு ராமபிரானுடைய ஸங்கம் கிடைப்பதற்கு முன்பே பிராட்டியை ராவணன் கவர்ந்து சென்றுவிட்டான். ஆகவே, முன்பின் பிராட்டியை பார்த்திராத ஹனுமான் அவளை பிராட்டி என்று எப்படி ஊர்ஜிதப்படுத்திக் கொண்டான் என்பதுதான் கவலை. அதை போக்கும் விதத்தில்தான் 'கண்களால்' என்ற பதம் பயன்படுத்தப்படுகின்றது. அதாவது உலகத்தில் உள்ள பெண்களின் கண்களைக் காட்டிலும் அவை

விலக்ஷணமாக உள்ளதால் அத்தகைய கண்களை உடையவள் பிராட்டியாகத்தான் இருக்க முடியும் என்பதை ஊர்ஜிதப்படுத்திக் கொண்டதைத்தான் ஹனுமார் கண்களால் என்ற **பதத்தினால்** கூறுகின்றார். மேலும் அவள் பவித்ரமாக இருப்பதற்கும் அவளுடைய கண்களே சாட்சியாக உள்ளது. தங்களுடைய பிரிவாற்றாமையால் வருந்தி வருந்தி அவள் துக்கப்படுவதை அவளுடைய கண்களே காட்டிக் கொடுத்து விட்டன, போன்றவற்றையெல்லாம் உத்தேசித்தே ‘கண்களால்’ என்ற பதப்ரயோகத்தை கம்பர் மிகவும் அழகாக செய்துள்ளார். அந்தப் பாடல்,

*கண்டனென், கற்பினுக்கு அணியை, கண்களால்,*
*தெண் திரை அலை கடல் இலங்கைத் தென்நகர்;*
*அண்டர் நாயக! இனி, துறத்தி, ஐயமும்*
*பண்டு உள துயரும்’ என்று அனுமன் பன்னுவான்:*



**லலிதா, ஹரிப்ரியாவிற்கு**
**செடியின் இலைகளை காண்பிக்கிறாள்.**

# பாலகர்களுக்கு ஒரு கதை - 52

தமிழ்நாட்டில் நீலகிரி மலைச்சாரலில் ஒரு பசுமையான கிராமம். அந்த கிராமத்தின் பசுமையான சூழலில் ஹரிப்ரியா தன்னுடைய தாயாருடன் வசித்து வந்தாள். ஹரிப்ரியாவிற்கு சில மாதங்களாக உடல் நிலை சரியில்லாமல் இருந்து வந்தது. அதற்கான மருந்துகளையும் காலம் தவறாமல் அவளுடைய தாய் அவளுக்கு கொடுத்து வந்தாள். நோய்வாய்ப்பட்டிருக்கும் அவளுக்கு இந்த பசுமையான சூழல் ஒரு ஆரோக்யமான சூழ்நிலையை ஏற்படுத்தி இருந்த போதிலும் ஹரிப்ரியாவிற்கு ஏனோ நாம் இந்த வியாதியிலிருந்து மீண்டு வருவோமா அல்லது இறந்து விடுவோமா? என்ற ஒரு கவலை அவளை வருத்திக்கொண்டே இருந்தது.

ஹரிப்ரியாவின் வீட்டிற்கு பக்கத்து வீடு சற்று தள்ளியிருக்கும். எதிர் சாரியிலும் சில வீடுகள் உண்டு. மேகக் கூட்டங்கள் குளிர்காலங்களில் தன்னை ஊடுருவிக்கொண்டே செல்வது அவளுக்கு ஒரு சுகமான அனுபவம். வீட்டிற்கு பின்புறம் உள்ள சிறிய வயல்வெளி துண்டுகளில் காரட் பயிரிடுவதுண்டு. ஹரிப்ரியாவிற்கு பச்சை காராட்டுகளை இலையோடு அப்படியே மண்ணிலிருந்து பிடுங்கி சாப்பிடுவதில் ஒரு அலாதி ஸுகம். ஹரிப்ரியாவின் உடல்நிலையைப் பற்றி கேள்விப்பட்டு அவளை பார்க்க அவளுடைய சிநேகிதியான லலிதாவும் வந்தாள். அவள் மிகவும் அழகாக ஓவியங்கள் வரையக் கூடியவள்.

ஹரிப்ரியாவிற்கு லலிதா தன்னுடனே இருப்பது ஏதோ ஒரு பலத்தை கொடுப்பதைப் போல் இருந்தது. அதை உணர்ந்த லலிதாவும் அவர்களுடன் சில காலம் தங்கியிருந்தாள். ஒவ்வொரு நாளும் ஹரிப்ரியா காலையில் படுக்கையை விட்டு எழுந்தவுடன் வேகமாக மாடிக்கு ஏறிச் சென்று அங்கு எதையோ மிகவும் தீவிரமாக நோக்குவதையும் பின்பு கவலை தோய்ந்த முகத்துடன் சிறிது நேரம் அப்படியே உட்கார்ந்து விடுவதையும் கவனித்தாள் லலிதா.

இது தினமும் தொடரவே, இதற்கான காரணத்தை லலிதா எவ்வளவு கேட்டும் முதலில் சொல்ல மறுத்த ஹரிப்ரியா, மிகவும் தயங்கியபடியே அதற்கான காரணத்தைக் கூறலானாள். எதிர்புறத்தில் ஒரு பாழடைந்த வீடு இருந்தது. அதில் ஒரு பசுமையான கொடி பரவியிருந்தது. அதைச் சுட்டிக்காட்டியபடியே ஹரிப்ரியா, ''நான் நோய்வாய்ப்பட்ட அன்று அந்த கொடியில் பல பசுமையான இலைகள் இருந்தன. அவை ஒவ்வொன்றாக உதிர்ந்து வருகின்றன. அவைகள் உதிர உதிர என்னுடைய உடலிலும் ஆரோக்யம் குறைந்து வருகின்றது. அதில் இன்னும் சில இலைகளே உள்ளன. அவைகள் முழுவதும் உதிர்ந்துவிட்டால் அன்று நான் இறந்து விடுவேன். ஆகவேதான் நான் தினமும் எழுந்தவுடன் முதல் வேலையாக ஓடி வந்து அந்தக் கொடியை பார்க்கின்றேன்'' என்றாள்.

இதைக் கேட்ட லலிதாவிற்கு வியப்பாகவும், சிரிப்பாகவும் இருந்தது. ''உன்னுடைய ஆரோக்யத்திற்கும் அந்த கொடிக்கும் என்ன ஸம்பந்தம். இதெல்லாம் மூட நம்பிக்கை. இப்படி ஒரு கற்பனையை வளர்த்துகொண்டு அதைர்யப்படாதே. நம்பிக்கையை இழக்காதே'' என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் அவள் அதை கேட்பதாக இல்லை. கடைசியில் லலிதா அவளை பார்த்து, ''ஒருக்கால் அந்த கொடி மீண்டும் இலைகள் விட்டு துளிர்க்க ஆரம்பித்தால் என்ன செய்வாய்?'' என்று கேட்டாள். அதற்கு ஹரிப்ரியாவோ, ''அப்படி நடக்காது. அப்படி மட்டும் நடந்தால் நான் நிச்சயம் பிழைத்து விடுவேன்'' என்றாள்.

இப்பொழுதெல்லாம் ஹரிப்ரியா, தினமும் லலிதாவையும் தன்னுடன் மாடிக்கு அழைத்துச்செல்கிறாள். அந்தக் கொடியில் இன்னும் இரண்டு இலைகளே இருந்தன. அவைகளும் இன்னும் ஓரிரு நாட்களில் விழுந்து விடும் போல் இருந்தது. ஹரிப்ரியா அதைப் பார்த்து மிகவும் கவலையுற்றாள். லலிதாவோ ஹரிப்ரியாவின் மரண பயத்தை பார்த்து செய்வதறியாது திகைத்தாள். அந்த கொடியில் கடைசி இலை மட்டும்தான் இருந்தது. அடுத்த நாள் காலையில் அதுவும் விழுந்திருக்கும் என்ற நம்பிக்கையுடன் ஹரிப்ரியா, லலிதாவை துணைக்கு அழைத்துகொண்டு மாடி ஏறிச் சென்றாள். என்ன ஆச்சர்யம்! அந்த இலை விழவில்லை. அது ஹரிப்ரியாவிற்கு ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தியது.

மறுநாள் பார்த்தால் அந்த இலை கீழே விழாதது மட்டும் அல்லாமல் மேலும் மேலும் அந்த கொடி துளிர்க்க ஆரம்பித்து தழைக்க ஆரம்பித்துவிட்டது. ஹரிப்ரியாவிற்கு மரண பயம் முற்றிலும் போய் விட்டது. அவள் இப்பொழுது மிகவும் ஆரோக்கியமாக ஆகிவிட்டாள். முழுவதும் குணமடைந்து விட்டாள். இப்பொழுதெல்லாம் அந்த கொடியை பார்ப்பதைக் கூட விட்டுவிட்டாள். அந்த ஸமயத்தில் லலிதாவும் ஊருக்குக் கிளம்ப ஆயத்தமானாள். அப்பொழுது அவளை எதிர்வீட்டில் அழைத்து பல இலைகளோடு இருக்கும் செடியை பார்க்கலாம் வா என்று அழைத்து போனாள். அருகே சென்று பார்த்தாள். ஹரிப்ரியாவிற்கு அப்பொழுதுதான் தெரிந்தது அது உண்மையான செடி அல்ல. அது ஒரு Painting என்று! ஒன்றும் புரியாமல் ஹரிப்ரியா விழிக்க லலிதா பேச ஆரம்பித்தாள்.

''நான் அன்று எவ்வளவு எடுத்து சொல்லியும் நீ உன்னுடைய எண்ணத்தை மாற்றிக் கொள்வதாக இல்லை. நீ எதிர்பார்த்தபடியே அந்த கொடியில் இலை அன்றே முற்றிலும் கீழே விழுந்துவிட்டது. உனக்கு நம்பிக்கையை ஏற்படுத்துவதற்காகத்தான் நான் என்னுடைய ஓவியத் திறமையினால் அந்த கொடியில் கடைசி இலை விழாததது போலவும், மேலும் மேலும் துளிர்ப்பது போலவும் அவ்வப்பொழுது வரைந்து வைத்தேன். இப்பொழுதாவது புரிந்து கொள். இது மாதிரியான மூட நம்பிக்கைகளை, அர்த்தமில்லாத கற்பனைகளை வளர்த்துகொண்டு நாம் தைரியத்தை இழக்கக்கூடாது'' என்றாள்.

ஹரிப்ரியாவும் கண்களில் நீர் மல்க லலிதாவின் இரு கைகளையும் பிடித்துக்கொண்டாள். தன்னுடைய முந்தைய நம்பிக்கையை நினைத்து இப்பொழுது அவளே வெட்கப்பட்டாள்.


ஆகவே, குழந்தைகளே! நாமும் இதுபோன்று ஆதாரமில்லாத கற்பனைகளை வளர்த்துகொண்டு அவைகளினால் அவதிப்பட்டு நம்முடைய மனோபலத்தை இழக்கக்கூடாது. எதையும் எதிர்கொள்ளும் மனோ**பா**வமும், எதிர்த்து போராடும் மனோ**பா**வமும் வேண்டும்.

**–ஆர். பாக்யநாதன்**

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் - 7

**(தொடர்ச்சி)**

ஒரு ஸமயம், கோபாலனை மெத்தென்று துணியில் எழுந்தருளச் செய்து ஒரு கூடையில் தூக்கி தலையில் வைத்துக் கொண்டு துர்கீமா, ப்ருந்தாவன பரிக்ரமா செய்ய ஆரம்பித்தாள். அடிக்கடி கூடையை கீழே இறக்கி அவன் பத்திரமாக இருக்கிறானா என்று சோதித்துக்கொள்வாள். ஏனெனில், கோபாலன் மிகவும் ஸஞ்சலமானவன். ஒரு இடத்தில் பொறுமையாக நிற்பது அவனது ஸ்வபாவத்துக்கு சரிப்பட்டு வராது. கோவர்த்தன பரிக்ரமாவில் மரம், கொடி, பசு, பக்ஷி, கோப கோபிகைகள் இவர்களின் ஆகர்ஷணத்திற்குக் குறைவேயில்லை. இவன் பாட்டுக்கு ஓடிவிட்டால் என்ன செய்வது என்று அடிக்கடி கவலையுடன் பார்த்துக்கொண்டே இருந்தாள். கடைசியில் சிறிது நேரம் கழித்து, நேரே ப்ருந்தாவனம் வந்து தனது அறை வாசலில் கூடையை வைத்துவிட்டு அறையைத் திறக்க ஆரம்பித்தாள். பூட்டு திறக்கவே இல்லை.



சரி கோபாலனுடன் சிறிது நேரம் வராந்தாவில் அமர்வோம்! யாராவது வந்தால் பூட்டைச் சரிபார்த்து திறக்கலாம்! என்று உட்கார்ந்தாள். கூடையைப் பார்த்தாள். கூடையில் கோபாலனைக் காணோம்! அவ்வளவுதான். கூச்சலிட்டு அழ ஆரம்பித்தாள். ''கோபாலா! எங்கேயடா போனாய்? என்னை விட்டுவிட்டு'' என்று கதறினாள்.

அப்போது வேணுகுஞ்சத்தைச் சேர்ந்த ஸ்ரீமனோஹரதாஸ் பாபா துர்கீமாவின் பரிச்சயமான குரலைக் கேட்டு அங்கு வந்தார். அவரிடம் அழுதுகொண்டே துர்கீமா தன் கதையைச் சொன்னாள். அவர் சாவியை எடுத்து பூட்டைத் திறக்க ஆரம்பித்தார். பூட்டு திறந்தது. கதவைத் திறந்து பார்த்தால் உள்ளே கோபாலன் தொட்டிலில் சிரித்துக்கொண்டு ஆனந்தமாகத் தூங்குகிறான்! ''அம்மா உன்னுடைய கோபாலன்தான் உள்ளே உறங்குகிறானே! நீ ஏன் வ்யர்த்தமாக துக்கப்பட்டு அழுகிறாய்?'' என்று அவர் கேட்டார். வேறு யாராவதாக இருந்தால், ''கிழவிக்கு பைத்தியம் பிடித்துவிட்டது. கண்ணனை உள்ளே விட்டுவிட்டு, மறந்துவிட்டு வெளியே அழுகிறாள்'' என நினைத்துக் கொள்வார்கள். மனோஹர்பாபாவுக்கு துர்கீமாவின் பக்தியும் கோபாலனின் லீலையும் நன்றாகத் தெரியுமாதலால் அவர் அப்படி நினைக்கவில்லை.

உணர்ச்சிவசத்துடன் அவன் தூங்குவதைப் பார்த்ததும் அவனை எழுப்ப மனமில்லாமல் மௌனமாகிவிட்டாள். அந்த கோபாலன் தூங்குவது போல் நடித்து, துர்கீமா திக்கித்து நிற்பதைக் கண்டு மகிழ்ந்தானோ என்னவோ?

துர்கீமா தன் எஞ்சிய வாழ்நாளை ரங்கஜீ மந்திரில் உள்ள அந்த அறையிலேயே கழித்தாள்; சிறிது கண்ணனைப் பற்றிக் கூறினாலும் வெளி ஞானமிழந்து அனிர்வசனீயமான ஆனந்த ஸாகரத்தில் மூழ்கிவிடுவாள். ஸ்ரீகௌராங்கதாஸ் பாபாவின் ப்ரவசனங்களைக் கேட்கும் ஸமயம், அனேக தடவை அவள் மூர்ச்சித்து வீழ்ந்து விடுவதை அனேகர் கண்டனர். ஒரு ஸமயம் ஸேவாகுஞ்சத்தின் அருகில் யாருடையவோ வேணுகீதத்தைக் கேட்டு எட்டு மணி நேரம் நினைவின்றி தரையில் கிடந்தாள்.

யமுனையில் ஸ்னானம் செய்யும் போது அடிக்கடி க்ருஷ்ணன் கோபிகைகளுடன் ஜலக்ரீடை செய்வதை நினைத்து த்யானமக்னமாகி மணிக்கணக்கில் யமுனையில் நிற்பாள். ஆமைகள் காலை கதுவினது கூட தெரியாமல் நிற்பாள். வெளிப்புற நினைவு வந்ததும் யமுனையில் இருந்து வெளியேறி, யமுனை மணலையே புண்களுக்கு தடவிக்கொள்வாள். நினைவிழந்து தெருவில் நடக்கும்போது வெறி பிடித்த நாய்கள் அவளைக் கடித்துவிட்டன. அந்த ரணத்துக்கும் இதே யமுனை மண்ணைத்தான் வைத்யமாக செய்துகொண்டாள். நாய் விஷம் அவளை ஒன்றும் செய்யவில்லை.

துர்கீமா மிகவும் சரளமானவளாகவும் சிறிது கூட அபிமானமற்றவளாகவும், கபடமின்றியும், எந்நேரமும் பகவன் நாம கீர்த்தனையில் ஈடுபட்டவளாகவும் இருந்ததால் பகவத்க்ருபை அவளுக்கு பரிபூர்ணமாக இருந்தது. தன் அறையை மூடிக்கொண்டு கீர்த்தனம் செய்வாள். சில ஸமயம் கதவில் காதை வைத்துக் கொண்டு கேட்பவர்களுக்கு இரு குரல்கள் ஸ்பஷ்டமாகக் கேட்குமாம். ஒன்று துர்கீமாவின் பரிச்சயமான குரல்! மற்றொன்று கிஷோர வயதுடைய ஒரு அதிஆகர்ஷணமுள்ள மதுரமான ஆண்குரல்! நம் கோபாலனுடைய குரல்தான் அது! ஆஹா! பகவானும் பக்தையும் சேர்ந்து செய்யும் திவ்யநாம ஸங்கீர்த்தனம்தான் எவ்வளவு மதுரமாக இருக்கும்! இருவரும் பேசிக்கொள்வது வெளியே கேட்குமாம்! ஒரு பெண் பக்தைக்கு உள்ளிருந்து, ''கோபாலா, கேள் எனக்கு நாமத்வனி வந்து கொண்டேயிருக்கிறது! எனது ஒவ்வொரு ரோமத்திலிருந்தும் நாமத்வனி கேட்கிறதடா! என்று துர்கீமா சொல்வது கேட்டதாம்.

துர்கீமா தனது எந்த அனுபவத்தையும் யாரிடமும் சொல்ல மாட்டாள். அப்படியும் மிகவும் ப்ரேம பக்தர்களிடம் ஒரு சில விஷயங்களை சொல்ல நேரிடும். ப்ருந்தாவனத்தின் டெபுடி கலெக்டர் ஸ்ரீநிர்ஜன்தாஸ்தீர் துர்கீமாதாவின் பக்தர். ஒரு ஸமயம், அவரிடம் துர்கீமா ''எனக்கு மிகவும் ஜாஜ்வல்யமான ப்ருந்தாவன தர்சனம் மூன்று முறை ஏற்பட்டுள்ளது'' என்று கூறினாளாம்.

(தொடரும்)

**– ஜயந்தி ஜானகிராமன்**

## மறக்க முடியாத நாள் (சென்ற இதழ் தொடர்ச்சி)

– நிர்மலா கிரி

சென்னைக்கு வந்து சேர்ந்த நாங்கள் நேராக பெசன்ட் நகர் சென்றோம். அங்கு ஸ்ரீமதி கனகம்மாளை, அவர்கள் தங்கியிருந்த உறவினர் வீட்டில் சந்தித்தோம். எங்களையெல்லாம் முகமலர்ச்சியுடன் வரவேற்று சிறிது நேரம் எங்களுடன் அளவளாவிக்கொண்டிருந்தார். பரிபூர்ணமாக பகவான் ரமணரிடம் தன்னை ஒப்படைத்துவிட்டு, ரமண மஹரிஷியின் தியானத்திலேயே வாழும் அவர்கள், பகவானின் அருளுரையில் சிலவற்றை எங்களிடம் எடுத்துரைத்ததை உங்களிடம் பகிர்ந்து கொள்கிறேன்.

''பகவான் ரமணர், உபதேசம் என படாடோபமாக இந்த மந்திரம், அந்த மந்திரம் என சிலரைப் போல எதுவும் செய்ய மாட்டார்'' என்றார் கனகம்மா. ஒரு முறை, ஒருவர் பகவானிடம், ''நான் ஒரு அஜ்ஞானி. நீங்களோ ஞானி. எனக்கு ஏதாவது உபதேசம் செய்ய வேண்டும்'' என்றார். உடனே பகவான், ''நான் ஞானி என்றால் அஞ்ஞானி என இன்னொருவன் இருக்க முடியாதே! நான் எப்படி, யாருக்கு உபதேசம் செய்ய முடியும்'' என்றார். பகவானிடம் ஒரு பக்தர், ''ஜீவன்முக்தனுக்கு லோகம் தெரியாது என்கிறார்களே! அப்படியென்றால் அவன் நடக்கும்பொழுது சுவரில் முட்டிக்கொள்வானா?'' என்று கேள்வி கேட்டார். அதற்கு பகவானோ, ''ஜீவன்முக்தனுக்கு நீ காணும் லோகம் இல்லை. எல்லாவற்றையும் அவன் தானாகவே காண்பான்'' என்றார்.

மற்றொரு ஸமயம், ஒரு அன்பர், ''நான் வெகுநாளாக தியானம் செய்துகொண்டிருக்கிறேன். ஆனால், எந்த முன்னேற்றமும் இல்லையே!'' என்றார். அதற்கு பகவான், 'எப்போது முன்னேற்றம் வரும்! எப்போது முன்னேற்றம் வரும்! என்பதையே தான் தியானம் செய்து கொண்டிருந்தால் எப்படி முன்னேற்றம் வரும்?' என்று சிரித்துக்கொண்டே சொன்னார். மற்றொரு அன்பர், ''ஆன்ம வித்யை அப்யஸிக்க மிகவும் கடினமாக உள்ளது'' என்று பகவானிடம் தெரிவித்தார். பகவான் அதற்கு ''அப்யஸிக்க வேண்டாம். இப்பொழுது இருப்பதுபோலவே வாழ்க்கையை நடத்து'' என்றார்.

கேள்வி கேட்டவரோ, ''இப்படி நான் வாழ்ந்தால் எனக்கு திருப்தியில்லையே!'' என்றார். பகவானோ, ''ஆன்மவித்யையை அறிந்துகொண்டால் உனக்கு திருப்திவரும் என்று யார் சொன்னார்கள்?'' என்றார். கேள்வி கேட்டவரோ, ''மஹாத்மாக்களும், க்ரந்தங்களும் சொல்கின்றனவே!'' என்றார். பகவான் ரமணரும் சிரித்துக் கொண்டே, ''அப்படியானால் செய்துதான் பாரேன்'' என்றார்.

வேறு ஒருவர், ''நீங்கள் வெளியில் சென்று ப்ரச்சாரம் செய்தால்தானே இந்த விஷயங்கள் அனைவருக்கும் தெரியும். நீங்கள் இங்கேயே உட்கார்ந்திருக்கிறீர்களே!'' என்று கேட்டார். அதற்கு பகவான், ''ப்ரசாரம் செய்ய வேண்டுமென்று நினைக்கின்றவனை அழிப்பதுதான் உண்மையான ப்ரச்சாரம்'' என்றார்.

ஒரு ஸமயம், ஒரு முருகன் உபாஸகர் பகவானை தரிசனம் செய்ய வந்தார். அவர் பகவானிடம், ''நான் தியானம் செய்த பொழுது முதலில் எனக்கு மயிலின் தரிசனம் ஏற்பட்டது!'' என்று கூற, பகவானும் மிகுந்த ஆர்வத்துடன் அதைக் கேட்டார். பகவான், ''அதற்குப் பிறகு என்ன ஆயிற்று?'' என்று கேட்க, அந்த பக்தர் ''அதன் பின் வள்ளி-தெய்வயானையின் தரிசனம் ஏற்பட்டது'' என்றார். பகவான் ரமணர், ''அதன் பின் என்ன ஆனது'' என்றார். அதற்கு அவர் ''முருகனின் தரிசனம் ஏற்பட்டது!'' என்று கூற பகவான் ரமணர், ''அதன் பிறகு என்ன ஏற்பட்டது?'' என்று கேட்க, அந்த முருகன் உபாஸகர் மௌனமாக இருந்தார். பகவான் ரமணர் ''மயிலின் தரிசனம் ஏற்பட்டது; பின்னர் மறைந்துவிட்டது. வள்ளி-தெய்வயானையின் காட்சி ஏற்பட்டது; அதுவும் மறைந்தது. முருகனின் தரிசனம் ஏற்பட்டது. பின்னர் அதுவும் மறைந்தது. ஆனால் 'நான்' மட்டும் மறையவில்லையே! 'நான்' மறைந்து விட்டால் பூர்ணமான ஞானம் ஏற்படும்!'' என்று கூறியது அந்த முருக பக்தருக்கு உயர்ந்த அத்வைத நிலையை உணர்த்தும் உபதேசமாக அமைந்தது.

ஒருவர் பகவானிடம், ''நான் சரணாகதி செய்து விட்டேன். ஆனால், பகவான் என்னை காக்கவில்லை'' என்றார். பகவான், ரமணர் அதற்கு ''ஓ! நீ பகவானை சரணடைந்தும் பகவான் உன்னை

காக்கவில்லையா? ஆனால், பகவான் உன்னைப் பார்த்துக் கொள்கிறாரா இல்லையா என பார்க்க ஒருவனை நீ நியமித்துள்ளாயே? பின் பகவான் உன்னை எப்படி பார்த்துக் கொள்வார்? அவனை விட்டு விட்டாயென்றால் பகவான் உன்னைக் காப்பார்!'' என்றார்.

ஒரு நடிகன் தான் நடித்து முடித்த திரைப்படத்தை தானே திரையில் காண்கிறான். இந்நடிகன் தன் நடிப்பில் சில குறைகளைக் காண்கிறான். ஷூட்டிங் முடிந்து திரைப்படம் வெளிவந்து விட்டது. இப்பொழுது இக்குறைகளை திருத்த வழியில்லை! அதனால் அடுத்த படத்தில், இத்தவறுகளை தவிர்க்க முடிவு செய்து அப்படியே இக்குறைகளை தவிர்க்கிறான். ஆனால், இப்படத்தில் வேறு புதிய தவறுகள் காணப்படுகின்றன! இப்படியே, ஒவ்வொரு படத்திலும் பழைய தவறுகள் தவிர்க்கப்பட்டாலும் புதியதாக வேறு ஏதோ தவறுகள் காணப்படுகின்றன. டைரக்டரிடம் சென்று ''எப்படி நடித்தாலும் புதிய தவறுகள் நேர்கின்றன. தவறுகளே இல்லாமல் ''பர்ஃபெக்ட்'' ஆக எப்படி நடிப்பது? எனக்கேட்கிறான். அதற்கு டைரக்டர், ''இதுவரை நீ நடித்து ஏதோ கொஞ்சம் நல்ல பெயரை ஸம்பாதித்துக்கொண்டுள்ளாய். இப்பொழுது நீ என்ன செய்ய வேண்டுமென்றால் நடிப்பதையே விட்டுவிட வேண்டும்! என்கிறார்.

பகவானின் இந்த உதாரணத்தைக் கூறிய கனகம்மா, ''நாம் தவறுகளே செய்யாமல் இருக்க முடியாது. மனிதனிடம் ஏதாவது தவறுகள் இருக்கத்தான் இருக்கும். 'நான்' என்பது அகன்றவுடன் 'தான்' ஆக (ஆத்ம ஸ்வரூபமாக) நிற்க, பூர்ணத்வம் நிலைத்து விடுகிறது'' என விளக்கினார். அனைவரும் கனகம்மாவிடம் பிரியாவிடை பெற்றுக் கொண்டு, அன்று காலை முதல் மாலைவரை நடந்த ஸம்பவங்களை அசைபோட்டுக்கொண்டே வீடு திரும்பினோம்.

– முற்றும்.

---

*தண்ணீரில் விழுந்த எண்ணெய் துளியும், தீயவன் காதில் விழுந்த ரகசியமும், தக்கவர்க்கு செய்யப்பட்ட உதவியும், அறிவாளியின் புலமையும் தன்னால் பரவிவிடுகிறது.*

– **சாணக்ய நீதி**

# ஸ்ரீஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 79

*''ஞானமில்லாது உன் ஆசையால் தளர்வற*
*ஞானந் தெரித்தருள் அருணாசலா* (தொடர்ச்சி)

ஆத்மாவைப் பற்றி படிக்கும்பொழுதோ, கேட்கும் பொழுதோ, ஆத்மாவை அடைய ஆசை வருகிறது. இந்த ஆசை இருந்தும், ஆத்மாவை அடைய ஒரு ப்ரயத்தனமும் நாம் செய்வதில்லை. காரணம், ஞானம், புத்திபூர்வமாய் உள்ளதே தவிர, அனுபவத்தில் இல்லை. நமக்கு ஜீவன்முக்தி அடைந்தால்தான் ஶாஸ்வதமான நிம்மதி கிடைக்கும், அதற்கு ஸாதனை செய்யவேண்டும் என்று தெரிந்தாலும் கூட, ஸாதனைக்கான லகுப்ரயத்தனம் கூட செய்யவில்லை என்றால், நமக்கு ஞானமே இல்லை என்றுதான் அர்த்தம்.

ஒரு மாணவனுக்கு நன்கு படித்து, பெரிய கலெக்டராகவோ, பொறியியல் வல்லுநராகவோ, மருத்துவராகவோ ஆசை. ஆனால், அதற்குத் தகுந்தாற்போல் படிப்பதில்லை. ஆக, அந்த மாணவன் பிற்காலத்தில் தனது லக்ஷியத்தை அடைய முடிவதில்லை. அதுபோல், ஞானத்தை அடைய வேண்டும் எனும் ஆசை இருக்கிறது. பகவானின் பெருமைகளையும், ஞானியின் லக்ஷணங்களையும். புனராவிருத்தி (புனர்ஜன்மம்) இல்லாத ஒரு நிலைமையையும் பற்றி கேள்விப்படும்போதெல்லாம் ஆசை வருகிறது. அப்பொழுதெல்லாம், ''பிறவி எடுத்ததே ஞானத்தை அடையவே'' என்று எல்லாம் தோன்றுகிறது. ஆயினும், ஒரு சிறிதேனும் இந்த ஸம்ஸாரத்தை விட்டு வரமுடியவில்லை.

இதையே பகவான் ரமண மஹரிஷிகள், ''பீசகோச கிருமி போல'' என்று, ஒரு அழகான உதாரணம் மூலம், அனுவாத நூன்மாலை எனும் தனது க்ரந்தத்தில் கூறுகிறார். பீசகோச கிருமி என்று பட்டுப்பூச்சியை சொல்கிறார். பட்டுப்பூச்சி புழுவாய் இருக்கும் பொழுது அதை யாரும் சீண்ட மாட்டார்கள். அது புழுவாய் இருக்கும்பொழுது, தான் அழகாக இருப்பதாக நினைக்குமாம். அது

தனது பாதுகாப்பிற்காக, தன்னைச் சுற்றி தனது நூலைக்கொண்டே ஒரு கூட்டைக் கட்டிக்கொள்ளும். அதுதான் அதற்கு ஆபத்தாய் முடிகிறது. பட்டுநூலால் ஆன கூடில்லாதபொழுது அந்த புழுவிற்கு ஆபத்தில்லை. இந்த பட்டுநூலை அது பாதுகாப்பிற்காக கட்டிக் கொண்ட பிறகு, அந்தப் புழுவைக்கொண்டு வந்து, வெந்நீரில் போடுவார்கள். (பட்டு நூலை எடுப்பதற்குத்தான்). ஆக, பாதுகாப்பிற்காக போட்டுக் கொண்ட பட்டுநூல் எப்படி பட்டுப்புழுவிற்கு ஆபத்தாய் முடிகிறதோ, அது போலவே, மனிதர்களான நாம் விவாஹம் செய்துகொண்டு, குழந்தைகளைப் பெற்றெடுத்துக்கொண்டு, நல்ல வீடு கட்டிக்கொண்டு வாழ்வது நமக்கு ஆபத்தாகிறது. விவாஹம் செய்துகொள்வது, வீடு கட்டிக் கொள்வது என்று ஜாக்ரதையாக காரியம் செய்வதுதான் நம்மை மறுபடி, மறுபடி (ஜன்மங்களில்) ஸம்ஸாரத்தில் தள்ளுகிறது. மேற்கண்ட விஷயங்களை எல்லாம், நமது சரீரத்தின் மேல் உள்ள அபிமானத்தினால்தான் செய்கிறோம்.

ஒருவன் சரீர ஹத்தி (தற்கொலை) செய்து கொள்கிறான். அப்படியானால், அவனுக்கு சரீர அபிமானம் போய்விடுகிறதா என்றால், இல்லவே இல்லை. ஏனெனில், ஒருவன் எதற்கு தற்கொலை செய்து கொள்கிறான்? அவன் ஞானத்தினால் செய்து கொள்வதில்லை. உடம்பில் வரும் தாங்க முடியாத வியாதியினாலேயோ, அவனுக்கு ஏற்படும் அவமானத்தினாலேயோ, கடன் தொல்லையினாலேயோ, அல்லது அவனுக்கு பிரதிகூலமாக (விரோதமாக- உதாரணம் தேர்வுகளில் தோல்வி) நடந்த ஒரு விஷயத்தினாலேயோதான் அவன் தற்கொலை செய்து கொள்கிறான். இது ஞானத்தினால் ஏற்பட்ட செயல் அல்லவே.

ஒருவரின் கையில் டார்ச்லைட் இருக்கிறது. மின்சாரம் இல்லாதபொழுது டார்ச்லைட்டை ‘ஆன்’ செய்து, வெளிச்சம் கொண்டுவர முயல்கிறார். டார்ச்லைட் பழுதானதால் அது எரியாமல் போகிறது. கோபத்தினால் அவர் அந்த டார்ச்லைட்டை போட்டு உடைத்து விடுகிறார். ஆயினும், உடன் வேறு ஒரு புது டார்ச்லைட் வாங்கி வைத்துக்கொள்கிறார். நன்றாக கவனித்துப் பார்த்தால் டார்ச்லைட் உடைந்ததால், அந்த மனிதருக்கு டார்ச்லைட் மேல்

உள்ள அபிமானம் குறைவதாகத் தெரியவில்லை. மாறாக, அது அதிகரித்துள்ளதையே காண்கிறோம். அதனாலேயே, வேறு ஒரு புது டார்ச்லைட் வாங்குகிறார்.

தனது கட்டுப்பாட்டில் உள்ள டார்ச்லைட் தான் சொன்னதை கேட்காததால், அதை உடைத்துவிட்டு வேறு ஒன்று வாங்குவது போல், தான் சொன்னதை தனது சரீரமும், மனமும் கேட்கவில்லை என்பதால், ஒருவன் சரீரஹத்தி செய்து கொள்கிறானே தவிர, ஞானத்தினால் இல்லை. இது ஒரு அஹங்காரமான செயலே. இதற்கு சரீர அபிமானம் போய்விட்டதாக அர்த்தமாகி விடாது. சரீர ஹத்தி செய்பவன் வேறு ஒரு சரீரம் எடுத்து கர்மங்களை அனுபவிக்க வந்து விடுகிறான்.

ஸம்ஸார துக்கத்தைப் பற்றி அநேக விஷயங்களைப் பற்றி கேள்விப்பட்டும், ஞானத்திற்கு முயற்சிக்காத ஸாமான்ய ஜனங்களின் கதி ஒரு விதமாகவும், உபாஸகர்களின் கதி ஒருவிதமாகவும், பூரணஞானத்தை அடைந்த மஹான்களின் கதி ஒருவிதமாகவும் இருக்கிறது.

(தொடரும்)

ஸ்ரீராமபிரான், எல்லோராலும் 'ஏகபத்னிவிரதன்' என்று புகழப்படுகிறான். மனிதர்களில், அநேகர்கள் ஏகபத்னிவிரதர்களாக இருக்கும்பொழுது, இறைவனான ஸ்ரீராமபிரான் ஏகபத்னிவிரதனாக இருப்பதைக் கொண்டாட வேண்டிய அவசியம் என்ன?

இறைவன் தனது அனைத்து அவதாரங்களிலும், தனது இரண்டு சக்திகளையும் மணம் புரிந்து கொள்கிறான். உதாரணமாக, ஸ்ரீக்ருஷ்ண பகவான் பாமா மற்றும் ருக்மணியை மணந்து கொண்டதையும், ஸ்ரீ முருகப் பெருமான் வள்ளி மற்றும் தெய்வயானையை மணந்ததையும் காண்கிறோம். அவ்வாறிருக்க, ராமர் தன்னுடைய அவதாரத்தில் மற்றொரு சக்தியைக்கூட மணந்து கொள்ளாமல், இச்சா சக்தியான சீதையை மட்டுமே மணந்து கொண்டதால்தான் ஏகபத்னி விரதன் என்று விசேஷமாக கொண்டாடப்படுகிறார்.

**- ஞானியார் அடிகளார்**

## செய்திகள்

### மார்ச் 3-ந் தேதி

சீர்காழியை அடுத்துள்ள திருநாங்கூர் திவ்யதேசங்களில் ஒன்றான கீழச்சாலையில் பெருமாள் கோவில் புனருத்தாரணத்தை ஒட்டி பாலாலயம் நடைபெற்றது. அது ஸமயம், காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை நம் சைதன்ய மஹாப்ரபு நாமபிக்ஷா கேந்த்ரா சார்பில், அகண்ட ''ஹரே ராம...'' நாமஸங்கீர்த்தனம் நடைபெற்றது.

### மார்ச் 9-ந் தேதி

ஏகாதஶியை ஒட்டி மதுரபுரி க்ஷேத்ரத்தில் கல்யாண ஸ்ரீநிவாஸபெருமாளுக்கு சிறப்பு திருமஞ்சனம் நடைபெற்றது. இரவு விசேஷ திவ்யநாமஸங்கீர்த்தனம் நடைபெற்றது.

### மார்ச் 12-ந் தேதி - மஹாசிவராத்திரி

வடவாம்பலம் ஆத்மபோதேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகளின் அதிஷ்டானத்தில் மஹாசிவராத்திரியை ஒட்டி ஐந்துகால பூஜை, அபிஷேக ஆராதனை, நம் ஸ்வாமிகளால் நடைபெற்றது. இதில் நம் பாடசாலை வித்யார்த்திகளால் ருத்ரம், சமகம் க்ரமபாராயணம், பத பாராயணம், ஏகாதஶ ருத்ர பாராயணம் நடைபெற்றது.

### மார்ச் 13-ந் தேதி முதல் 19-ந் தேதிவரை

சென்னை நங்கைநல்லூர், ஸ்ரீ அர்த்தநாரீஶ்வரர் ஆலயத்தில் 34-வது ஆண்டு மஹாசிவராத்திரி உத்ஸவத்தை முன்னிட்டு ஸ்ரீ ஸ்வாமிகள் தினசரி இரவு 7 மணி முதல் 9 மணி வரை உபன்யாஸம் செய்தார்கள். மிகவும் திரளான பக்தர்கள் தினமும் ஸ்ரீ ஸ்வாமிகளின் ப்ரவசனத்தை ஶ்ரவணம் செய்தார்கள்.

### அறிவிப்பு

அயோத்தி ப்ரச்சனையை ஒட்டி வட மாநிலங்களில் அமைதியின்மை நிலவுவதால் ஸ்ரீ ப்ருந்தாவன யாத்திரை தற்காலிகமாக தள்ளி வைக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

**மார்ச் 16, 17 தேதிகள்**

சென்னை, அசோக்நகர், 11-வது அவென்யூ, அசோக் ஸ்ரீராம் புலியூர் ஸ்ரீ குருமூர்த்தி அவர்களின் க்ருஹத்தில் மார்ச் 16-ந் தேதி இரவு 10 மணி முதல் நள்ளிரவு வரை நடைபெற்ற திவ்யநாம கீர்த்தனத்தில் ஸ்ரீ ஸ்வாமிகள் கலந்துகொண்டார்கள். மார்ச் 17-ந் தேதி அன்று நடைபெற்ற ராதாகல்யாண மஹோத்ஸவத்திலும் ஸ்ரீ ஸ்வாமிகள் கலந்துகொண்டார்கள்.

**பிப்ரவரி 13-ந் தேதி - பன்னிரண்டு கருடஸேவை - திருநாங்கூர்**

ஸ்ரீ ஸ்வாமிகளின் ஆக்ஞையின் பேரில் சீர்காழி, திருநாங்கூர் திவ்யதேசம் பன்னிரண்டு கருடஸேவை உத்ஸவத்தில் கலந்து கொள்ள நம் ஸத்ஸங்கத்தினர், காலை 5 1/2 மணியளவில் சென்னை ப்ரேமிகபவனத்திலிருந்து புறப்பட்டு இரண்டு பஸ்களில் மதுரபுரி சென்று அங்கு அமரம்பேடு, பூந்தண்டலம், களத்துப்பட்டு, கொளத்தூர், இரும்பேடு, மேட்டுக்கொளத்தூர் கிராமங்களில் இருந்து வந்த 100 பக்தர்களுடன் சீர்காழி சென்றடைந்தனர். ''ஹரே ராம'' மஹாமந்த்ரத்தை நாமகீர்த்தனம் செய்துகொண்டே திருநாங்கூர் வீதிகளில் சென்று ஒவ்வொரு திவ்யதேசத்தையும் ஸேவித்தனர்.

இரவு பத்து மணியளவில் 10,000க்கும் மேற்பட்ட பக்தர்கள் கூடியிருந்த ஸ்ரீ நாராயண பெருமாள் கோவிலுக்குச் சென்று பன்னிரண்டு கருட ஸேவையை தரிசித்து ''ஹரே ராம'' மஹாமந்த்ரத்தை திவ்யநாம கீர்த்தனமாக நள்ளிரவு வரை பாடினர். பன்னிரெண்டு பெருமாளுக்கும் மிஷன் சார்பில் பட்டு வஸ்த்ரங்கள் ஸமர்ப்பிக்கப்பட்டன. கருடவாஹனத்தில் திவ்யதேசபெருமாள் அனைவரும் திருவீதி புறப்பாடு கண்டருளினர். நாமயாத்திரையாக பன்னிரண்டு கருடஸேவையை தரிசித்து ஸத்ஸங்கத்தினர் சென்னை திரும்பினர்.

---

முட்டாள்களுக்கு பண்டிதர்களைக் கண்டால் காரணமில்லாமல் பகையுணர்வு ஏற்பட்டுவிடுகிறது. ஏழைக்கு செல்வந்தனிடமும், விலைமாதுவிற்கு நல்ல குடும்பத்துப் பெண்ணிடமும், விதவைக்கு சுமங்கலியிடமும் காரணமில்லாமல் பகையுணர்வு தோன்றும்.

- **சாணக்ய நீதி**


# மதுரமுரளி

Registered as Newspaper in India R. No. 62828 / 95

Regd. No. TN / Chief PMG / 156 / 2002

Licensed to Post without prepayment WPP No. 52 / 2002

வேணு : 7 | ஏப்ரல் 2002 | கானம் : 9

"கண்டனென், கற்பினுக்கு அணியை, கண்களால்"


Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600 083. ✆ : 4895875 and Printed by Mrs. Sri. Kalaivani of Sri Maruthy Laser Printers, 200 (173), Peters Road, Chennai - 600 014. ✆ : 8522656 / 8524256 Editor : S. Sridhar. Visit us at www.madhuramurali.org